1979 பிப்ரவரி 14]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்த மசோதாவைக் கொண்டுவருவதற்கு அமைச்சர் அவர்கள் கூறியுள்ள காரணம், மழைக்காலம் வருகிறது, வாகனங்களைப் பயன்படுத்த வசதியில்லாமல் இருக்கிறது; வாக்காளர்கள் மழைக்காலத்தில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் தேர்தல்கள் நடத்த வாய்ப்பில்லாமல் இருக்கிறது என்ற காரணங்களைச் சுட்டிக்காட்டியிருப்பதைப் பார்க்கும்போது வியப்பாகயிருக்கிறது. தேர்தல்கள் நடத்துவதற்கு இப்படிப்பட்ட காரணங்களைக் காட்டுவது முறைதானா? நிச்சயமாக, வேறு அரசியல் காரணங்கள் இருந்தால் அவற்றை மறைத்துவிட்டு காரணம் இல்லாமலேயே தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டு மசோதாவைக் கொண்டு வந்தால் உங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது, நீங்கள் செய்யலாம். ஆகவே, இதைக் கொண்டு வருவதற்கான காரணங்களாக, மழைக்காலம் வந்துவிட்டது, மக்களுக்கு வேளாண்மைத் தொழில் செய்யவேண்டியிருக்கிறது, வாகனங்கள் செல்ல வசதியில்லை என்றெல்லாம் கூறுவது நிச்சயமாக பொருத்தமாகயில்லை. ஆகவே இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்த சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

(ஆ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, இந்த மசோதாவையினையும் முன்பு சொன்ன அடிப்படையில் எதிர்க்கிறேன். ஒன்றியக் குழுக்களில் தனி அதிகாரிகளை நியமித்திருப்பதால் தமிழ்நாட்டில் எல்லாயிடங்களிலும் டி.டி.ஓ., பி.டி.ஓ., யூனியன் என்ஜினியர் என்று மூன்று பேர்கள்தான் நிர்வாகத்தை நடத்துகிறார்கள்—நிர்வாகத்தில் ஊழல், லஞ்சம் பெருகிவிட்டது.

குற்றச்சாட்டுக்காக நான் இதைச் சொல்லவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் ஸ்டேட் க்ரைம் ப்ராஞ்சை வைத்து ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள நியமனங்கள், நடைபெற்றிருக்கக்கூடிய வேலைகளில் லஞ்சம் ஊழல் பெருகியிருப்பதைக் காண முடியும். அதிகாரிகள் தவறாக நடந்திருக்கிறார்களா என்பதுபற்றி விசாரிக்கட்டும், மனச்சாட்சியோடு நடந்தால் போதும்.

[முற்பகல் 11.40]

எந்த அளவுக்கு அரசியல்வாதிகள் ஒருவருக்கொருவர் பழியை தூற்றிக் கொண்டிருந்தார்களோ, அதைவிட பல மடங்கு இன்றைக்கு அதிகாரிகளிடத்தில் ஊழலும், லஞ்சமும் இருந்து கொண்டிருக்கிறது. ஊழலும் லஞ்சமும் இல்லாத இடமே இல்லை. அந்த அளவுக்கு நிர்வாகமே சீரழிந்து விட்டது. இதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் அளவில், இனி மேலும் தனி அதிகாரிகளுடைய ஆயுள் காலத்தை குறைக்க வேண்டுமே தவிர நீட்டிக்கக் கூடாது என்பதைக் கூறி அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

6. ஆளுநர் உரைக்கு நன்றிகூறும் தீர்மானம்-விவாதம்-தொடர்ச்சி.

திரு. எஸ். நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரை மீது பேசுகின்ற வாய்ப்பினை பயன்படுத்தி சில கருத்துக்களைக் கூறலாம் என்று கருதுகிறேன். சென்ற முறை ஆளுநர் உரையில் காவிரி நதி நீர் பற்றி குறிப்பிட்டு, அண்டை மாநிலங்களுடன் சுமுகமாக பேச்சு வார்த்தை நடத்தி நல்ல தீர்வு காண்போம் என்ற அறிவிப்பு இருந்தது. ஆனால் இந்த முறை அந்த அறிவிப்பைக் காணோம். காவிரியின் கதி என்னவாயிற்று? ஒப்பந்தம் பின்பற்றப்படுமா இல்லையா என்கின்ற கவலையுடன் தஞ்சை மாவட்டத்து மக்கள் மிகுந்த